**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C.**60/2024

**Prosecution Witness** : 6

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. முத்து லெட்சுமி | **Caste** | : | |
| **Father's Name** | : | திரு. கிருஷ்ணன் | **Calling** | : | |
| **Village** | : | அம்மா பட்டி | **Religion** | : | இந்து |
| **Taluk** | : | திண்டுக்கல் | **Age** | : | 46 |
| | | | **Dated** | : | 29.08.2024 |

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது

**Accused present. Both side counsels present.**

பட்டியல் சாட்சி 6 திருமதி. முத்து லெட்சுமி ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அ.சா.6 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து தோட்டத்து வேலை செய்து வருகிறேன். கடந்த 06.08.2023ம் தேதி ஞாயிற்றுக் கிழமை காலை 08.00 மணி இருக்கும். புகழ்நாதன், சரவணனை ரெட்டியார் சத்திரம் மருத்துவமனைக்கு கூப்பிட்டு சென்றுவிட்டு திரும்பி வந்து வீட்டில் இறக்கி விட்டார். சுமார் 10.30 மணிக்கு புகழ்நாதன், சரவணனை இறக்கி விட்டுவிட்டு வெளியில் வந்த போது ஆஜர் எதிரி ராஜா புகழ்நாதனை பார்த்து

தேவிடியா பயலே அவனை எதுக்குடா எங்கம்மாவை அடித்த அவனை ஆஸ்பத்திரிக்கு கூட்டிக்கொண்டு போனாய் என கேட்டு அடித்து கீழே தள்ளி அவர் மேலே ஏறி தலையிலும், நெஞ்சிலும் குத்தினார். எதில் குத்தினார் என நான் பார்க்கவில்லை. சத்தம் கேட்டு என் பெரிய மகன் அசா.3 செல்வக்குமார் போய் அடித்ததை பார்த்து விட்டு விலக்கி புகழ்நாதனை கூட்டிவந்தபோது புகழ்நாதன் அவரிடம் மாப்பிள்ளை எனக்கு நெஞ்சு படபட என வருகிறகு, தலை பயங்கரமாக வலிக்கிறது என்று சொல்லிவிட்டு, அவர் வீட்டு அருகே வந்த போது என் சின்ன மகன் அசா.5 செந்தில்குமாரை பார்த்து சீக்கிரம் வா ஆஸ்பத்திரிக்கும் போக வேண்டும் கார் எடுத்துக் கொண்டு வா என சொன்னார். செந்தில் குமாரும், செல்வக்குமாரும் காரை எடுத்து கொண்டு வந்து புகழ்நாதனை ஏற்றிக் கொண்டு செல்லும் வழியில் என்னையும் ஏற்றிக் கொண்டு நாங்கள் ரெட்டியார் சத்திரம் தனியார் மருத்துவமனைக்கு சென்றோம். அங்கிருந்த மருத்துவர்கள் அவரை பரிசோதனை செய்துவிட்டு அவருக்கு பல்ஸ் குறைவாக இருப்பதாக கூறியதால் அதன் பேரில் புகழ்நாதனை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு போனோம். உள்ளே போனதும் அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் இறந்துவிட்டாதாக கூறினார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-

காரில் கீதா லோசினி அசா.1 எங்களுடன் வரவில்லை. எங்கள் ஊருக்கும், தோட்டத்திற்கும் இடையே 1 கி.மீ. முதல் 1 ½ கி.மீ. தூரம் இருக்கும். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. காரில் இரத்தம் எதுவும் சிந்தி இருக்கவில்லை. மருத்துவர்கள் எங்களுக்கு தெரிந்தவர்கள். மருத்துவர்கள் என்ன நடந்தது என்று கேட்டார்கள், நாங்கள் சீக்கிரம் வாருங்கள் என்று

சொன்னோம். தோட்டத்திற்கு கார் வரும்போது 10.00 மணிக்கு மேல் இருக்கும்.

R KANAGARAJ
Digitally signed by R KANAGARAJ
Date: 2024.08.29 18:37:41 +0530